செய்தி வெளியீடு எண்:042 நாள்: 19:01:2017

# திருக்கோயில்களில் பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை சிறப்பாக மேற்கொள்ள இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேவூர் எஸ்.இராமசந்திரன் அலுவலர்கள் ஆய்வுக்கூட்டத்தில் வேண்டுகோள்

==================================

சென்னை, நுங்கம்பாக்கத்தில் உள்ள இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலகக் கூட்ட அரங்கில் இன்று (19.01.2017) இந்து சமய அறநிலையத் துறை செயல்பாடுகள் குறித்த அலுவலர்கள் ஆய்வுக் கூட்டம், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேவூர் எஸ்.இராமசந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அமைச்சர் பேசும்போது, மறைந்த முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் தொடங்கிவைக்கப்பட்ட அன்னதானத்திட்டம் அனைத்து திருக்கோவில்களிலும் சிறப்பாக நடைபெற அலுவலர்கள் தொடர் கண்காணிப்பு மேற்கொள்ள வேண்டும். திருக்கோயில்களுக்கு சொந்தமான சொத்துக்களை பாதுகாப்பதிலும், ஆக்கிரமிக்கப்பட்ட சொத்துக்களை மீட்பதிலும் தனிக் கவனம் செலுத்த வேண்டும். கோயில்களுக்கு செலுத்த வேண்டிய வாடகை வசூல் செய்து வருவாய் பெருக்கிட வேண்டும்.

திருக்கோயில்களுக்கு வருகைதரும் பக்தர்களின் வசதிக்காக அனைத்து திருக்கோயில்களிலும் நவீன கழிவறை, குளியல்அறை மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் போன்ற அடிப்படை வசதிகளை முழுமையாக செய்திட நடவடிக்கை எடுக்க வே;ணடும். திருக்கோயில்களில் முக்கியத் திருவிழாக்கள் நடைபெறும் காலங்களில் பெருமளவில் பக்தர்கள் வருகை தருவதால் விழாவில் எவ்வித அசம்பாவிதமும் நடைபெறாமல், உரிய பாதுகாப்பு முன்னேற்பாடுகளை செய்திட வேண்டும். திருக்கோயில்களின் சுற்றுப்புற தூய்மை மற்றும் சுகாதாரத்தை நல்ல முறையில் பராமரிக்க வேண்டும். திருத்தேர்களின் பராமரிப்பு மற்றும் திருக்குளங்களின் பராமரிப்பிலும் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும்.

இதுபோல் தமிழகத்தின் அனைத்து திருக்கோயில்களிலும் பக்தர்களுக்கான அடிப்படை கட்டமைப்பு வசதிகள் அனைத்தும் சிறப்பாக செயல்படுவதை உறுதி செய்யவேண்டும் என்றும், திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்கள் காலதாமதம் இல்லாமல் சுவாமி தரிசனம் செய்து பாராட்டும் வகையில் தேவைகளை நிறைவேற்றித்தர அலுவலர்கள் பணியாற்ற வேண்டும் என்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேவூர் எஸ்.இராமசந்திரன் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையங்கள் துறை முதன்மை செயலாளர்(பொ) திரு.டி.கே.இராமச்சந்திரன் இ.ஆ.ப., இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் முனைவர் மா.வீரசண்முக மணி, கூடுதல் ஆணையர் (பொது) திருமதி ந.திருமகள், கூடுதல் ஆணையர் (திருப்பணி) மா.கவிதா அனைத்து மாவட்டங்களில் பணியாற்றும் இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள், செயல் அலுவலர்கள் மற்றும் தலைமையிட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**